

கோயம்புத்தூர் – அவிநாசி சாலை உப்பிலிபாளையம் முதல் கோல்டுவின்ஸ் வரையிலான மேம்பாலத்தில் வர்ணம் பூசும் பணி நடைபெற்று வருவதை பொதுப்பணித்துறை அமைச்சர் .எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அரசு முதன்மை செயலாளர் குமார் ஜெயந்த், மாவட்ட ஆட்சித் தலைவர்கிராந்தி குமார் பாடி, நெடுஞ்சாலைகள் துறை தனி அலுவலர் சந்திரசேகர் ஆகியோர் உள்ளனர்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்டை, நவ.6-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் -சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது. புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் உள்ள திருமயம் ஆலங்குடி அறந்தாங்கி ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளிலும்



வாக்காளர் பட்டியல் சாரிபார்ப்பு மற்றும் வாக்காளர் சேர்த்தல் முகாம் நடைபெறுகிறது. இதில் 1.1.2025 ல் 18 வயது பூர்த்தி அடைந்தவர்களை (31.12.2006க்கு முன் பிறந்தவர்கள்) வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படலாம். இந்த வாக்காளர் சேர்த்தல் மற்றும் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் சிறப்பு முகாம் 16.11.2024 சனி, 17.11.2024 ஞாயிறு மற்றும் 23.11.2024 சனி, 24.11.2024 ஞாயிறு ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. இந்த சிறப்பு முகாமில் புதிதாக பெயர் சேர்ப்பதற்கு படிவம் 6, ஆதார் விபரம் சேர்க்க படிவம் 6 பி., பெயர் நீக்கம் செய்ய படிவம் 7, எழுத்துபிழைகள், முகவரி மாற்றம் செய்ய படிவம் 8 ஆகியவற்றை பயன்படுத்தி வழங்கலாம். மேலும் இந்த படிவங்களை 29.10.2024 முதல் 28.11.2024 வரை வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் வழங்கலாம். மேலும் இந்த பணியில் புதிதாக தேர்ந்தேடுக்கப்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள்,

நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் சிறப்பாக செயல்பட வேண்டும்

என்றும், வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம் குறித்து ஒன்றிய,

நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் கழகத்தினர் மற்றும் வாக்குச்சவாடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ. 2) தெரிவித்து பணியினை செம்மையாக செய்திட வேண்டும் என்றும், பெயர்

சேர்த்தல், நீக்கல் விவரங்களின் பட்டியலை தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைத்திட ஏதுவாக மாவட்டக் கழகத்திடம் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் ஒப்படைத்திட வேண்டும்.

இவ்வாறு தனது அறிக்கையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை கல்வி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாவட்ட திட்ட அலுவலகம், தொடக்க கல்வி அலுவலகங்களில் அமைச்சர்அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று முன்தினம் ( 04.11.2024) திடீர் ஆய்வு மேற்கொண்டு பள்ளிகளுக்கு விலையில்லா பொருட்கள் அனுப்பபட்டுள்ள விவரங்கள் மற்றும் மாவட்ட அளவில் தேர்ச்சி விகிதம் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

### கோவை மாவட்டம்: அவிநாசி சாலையில்

# உப்பிலிபாளையம் முதல் கோல்டுவின்ஸ் வரை - உயர்மட்ட சாலைப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

கோவை, நவ. 6-

கோயம்புத்தூர் மாவட்டம், அவிநாசி சாலையில் உப்பிலிபாளையம் முதல் கோல்டுவின்ஸ் வரை உயர்மட்ட சாலை பணிகள், மதுக்கரை மற்றும் கோவைப்புதூர் பகுதியில் நடைபெற்று வரும் மேற்கு புறவழிச்சாலை பணிகள் மற்றும் மேட்டுப்பாளையம் சாலையில் சாய்பாபா காலனி சந்திப்பில் சாலை மேம்பாலம் கட்டுமான பணிகள் ஆகிய பணிகளை பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கோயம்புத்தூர் மாவட்டம், அவிநாசி சாலையில் உப்பிலிபாளையம் முதல் கோல்டுவின்ஸ் வரை உயர்மட்ட சாலை பணிகள், மதுக்கரை மற்றும் கோவைப்புதூர் பகுதியில் நடைபெற்று வரும் மேற்கு புறவழிச்சாலை பணிகள் மேட்டுப்பாளையம் சாலையில் சாய்பாபா காலனி சந்திப்பில் சாலை மேம்பாலம் கட்டுமான பணிகள் ஆகியவற்றை நேற்று முன்தினம் (04.11.2024) பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, நெடுஞ் சாலைகள் துறை தனி அலுவலர் சந்திரசேகர், கோட்டப் பொறியாளர் ஞானமூர்த்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.நா.கார்த்திக் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

பின்னர் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப் பேற்ற இந்த மூன்று ஆண்டுகளில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 664 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்தல், விரிவுபடுத்துதல், சீர்செய்தல் ஆகிய பணிகளுக்கு ரூ.997 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். 652 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 12 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை பணிகள் நடைபெற்று வருகின்றன. 2024-25 நடப்பாண்டில் 148 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் ரூ. 332 கோடி மதிப்பீட்டில் அகலப் படுத்தி மேம்பாடு செய்ய டெண்டர் விடப்பட்டுள்ளது. 7 பாலப்பணிகள் ரூ.9.60 கோடிகளில் முடிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 2 பாலப் பணிகள் ரூ.5.70கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சுற்றுவட்ட சாலை அமைக்கவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. மேற்கு சுற்றுவட்டச்சாலையானது மொத்தமாக 32.43 கி.மீ நீளத்தில் மதுக்கரை அருகில் துவங்கி நரசிம்மநாயக்கன்பாளையத்தில் முடிவடைகிறது. மதுக்கரை முதல் மாதம்பட்டி வரை 11.80 கி.மீ நீளத்திற்கு பகுதி-I ஆகவும், மாதம்பட்டி முதல் கணுவாய் வரை 12.10 கி.மீ நீளத்திற்கு பகுதி-II ஆகவும், கணுவாய் முதல் நரசிம்மநாயக்கன்பாளையம் வரை 8.52 கி.மீ. நீளத்திற்கு பகுதி-III ஆகவும், பிரித்து மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படவுள்ளது. மேற்கு சுற்று வட்டச்சாலையின் முதற்கட்டமாக, மதுக்கரை முதல் மாதம்பட்டி வரை 11.80 கி.மீ நீளத்திற்கு ரூ.250 கோடி மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. ஆகஸ்ட் 2025க்குள் இப்பணிகள் முடிக்கப்பட வுள்ளது. சாலை அமைக்கும் பணிகள் விரைவாக நடைபெறுகின்றதா என்பது குறித்து இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவது கட்ட பணிக்காக 95 சதவீதம் நிலஎடுப்பு பணிகள் முடிவடைந்து, திட்டமதிப்பீடு தயார்செய்யப்பட்டு, நிதித்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது மூன்றாவது கட்ட நிலஎடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றது. இந்த சாலை அமைப்பதன் மூலம் கேரளா மாநிலத்திலிருந்து நீலகிரி செல்பவர்கள் கோயம்புத்தூர் நகரப்பகுதிக்குள் வராமல் விரைவாக செல்லமுடியும். கோயம்புத்தூர் மாநகர் பகுதியில் போக்குவரத்து நெரிசல் குறைக்கும் வகையில் முதலமைச்சர் அவர்களால் இந்த மேற்கு புறவழிச்சாலை அறிவிக்கப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றது.

### ரூ.1791.22 கோடியில் உயர்மட்டச் சாலை

கோயம்புத்தூர் மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசல் நிறைந்த பகுதியானது கோயம்புத்தூர்-அவினாசி சாலையாகும். அவினாசி சாலையில் கோல்டு வின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை ரூ.1791.22 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டச் சாலை அமைக்கும் பணி 83 சதவீத பணிகள் முடிவுடைந்துள்ளன. பிரதான உயர்மட்ட சாலைப் பணிகள் ஜனவரி 2025க்குள் முடிவடையும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த பாலப்பணிகள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டு, ஒப்பந்ததாரரிடம் பணியினை குறித்த காலத்திற்குள் விரைந்து முடிக்க அறிவுறுத்தப்பட்டது.

மேட்டுப்பாளையம் சாலையில் ரூ.71.05.கோடி மதிப்பீட்டில் சாய்பாபா காலனி சந்திப்பில் 1.20 கிலோ மீட்டர் நீளத்தில் சாலை மேம்பாலம் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றது. இப்பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், மேம்பால சாலையில் துளையிட்டு, சாலையின் தரம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. சிங்காநல்லூர் மேம்பாலம் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தின் வளர்ச்சிக்கு இது போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார்கள்.

இவ்வாறு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



நவீன தமிழகத்தின் சிற்பி தலைவர் கலைஞரின் நூற்றாண்டையொட்டி தி. மு. க.இளைஞரணி சார்பில் தமிழ்நாடு அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் கலந்துகொண்டு மாநில அளவில் இரண்டாம் இடம் பிடித்து தமிழக முதல்வர் தளபதியார் மற்றும் துணை முதலமைச்சர் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரிடம் பரிசு பெற்ற நாகை மாவட்டம் வேதாரணியம் வட்டம் பஞ்சநதிக்குளம் நடுசேத்தி கிராமத்தைச் சேர்ந்த ஆசிரியர் மதியழகனின் மகள் சிவரஞ்சனியை தலைமைக் கழக வழக்கறிஞர் மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சீ.க.மறைமலை நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார் . இந்த நிகழ்வில் மாவட்ட விவசாய அணித் தலைவர் சின்ன குமார் , மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.எஸ்.அசோக், பன்னாள் கிளை செயலாளர் குமணன் ஆயக்காரன்புலம் 4 பி.சி.கார்த்தி குரவபுலம் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் ராமசுப்பு , ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் வைரவநாதன், ஊராட்சி தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரவி மற்றும் குடும்பத்தினர் உடனிருந்தனர்


